**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

**அசல் வழக்கு எண். 71/2019**

2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 14ம் நாள் வெள்ளிக் கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய CW1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 செல்வி.S.கௌசல்யா என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | **நடேச பாரதி** | **தொழில் :** | உதவியாளர், பதிவுதுறை |
| **தந்தை பெயர் :** | **ஆத்மநாதன்** | **சமயம் :** | – |
| **ஊர் :** | முத்துப்பேட்டை | **வயது** | 34 |
| **தாலுக்கா :** | முத்துப்பேட்டை | **சாதி:** | – |

**14.11.2025**

**முதல் விசாரணை**

மாவட்ட பதிவாளர், பட்டுக்கோட்டை அவர்களுக்கு நீதிமன்றம் மூலம் அழைப்பாணை வந்ததன்பேரில் அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள உயில் ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டி மாவட்ட பதிவாளர் பட்டுக்கோட்டை உத்தரவின்பேரில் இங்கு ஆஜராகி இவ்வழக்கு சம்பந்தப்பட்ட பட்டுக்கோட்டை எண்.1 இணைசார்பதிவாளர் அலுவலக 3 புத்தக, ஆவண எண்.3/2020 ல் பதியப்பட்ட அசல் உயிலினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். எனக்கு மாவட்ட பதிவாளர், பட்டுக்கோட்டை வழங்கிய உத்தரவு **நீ.ம.சா.ஆ.1** ஆக குறியிடுகிறேன். மேற்படி உயில் விஜயத்தம்மாள் என்பவர் எழுதி பதிவு செய்துள்ளார். உயிலின் நகல்(அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது) **நீ.ம.சா.ஆ.2** ஆக குறியிடப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

உயில் சொத்து எங்கு உள்ளது என்றால் மதுக்கூர் சார்பதிவகம், வேப்பங்குளம். உயில் ஆவணம் எந்த தேதியில் எங்கள் அலுவலகத்திற்கு வந்தது என்றால் 03.04.2018. உயில் தபால் மூலம் வந்ததா என்றால் இல்லை விஜயத்தம்மாள் நேரடியாக வந்து கொடுத்தார். விஜயத்தம்மாள் கொடுத்த தபால் உயிலுக்கு சரியான பதிவு கட்டணம் செலுத்திதான் நாங்கள் வாங்கினோம் என்றால் ஆமாம். விஜயத்தம்மாள் உடல்நிலை

பாதிக்கப்பட்டிருந்ததால் எங்கள் அலுவலகத்திற்கு நேரடியாக வந்து அவர் கொடுக்கவில்லை என்றால் அதுமாதிரி இல்லை அவர்தான் நேரில் வந்து கொடுத்தாக எங்களிடம் ஆவணம் உள்ளது. விஜயத்தம்மாள் சுயநினைவின்றி ஊரில் இருந்தார் வாதி சிங்காரவேல் என்பவர்தான் எங்கள்அலுவலகத்திற்கு வந்து கொடுத்தார் என்றால் இல்லை எங்களிடம் உள்ள ஆவணம் படி சிங்காரவேல் கொடுக்கவில்லை விஜயத்தம்மாள் தான் கொடுத்தார். சிங்காரவேல் மோசடியாக எங்கள் அலுவலகத்தில் வந்து பதிவு செய்துள்ளார் என்றால் இல்லை உயிலை பதிவு செய்தபோது 2 சாட்சிகள் சங்கர் த.பெ.சிவஞானம் மற்றும் பொன்மலர் த.பெ.மாரிமுத்து என்பவர்கள் முன்னிலையில் உயில் ஆவணம் ஒப்படைக்கப்பட்டது.

எங்கள் அலுவலகத்தில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் 2018 ல் இல்லை. உயில் ஆவணத்தை இன்னார்தான் வந்து கொடுத்தார் என்று என்னால் சொல்லமுடியாது என்றால் ஆமாம். சிங்காரவேல் மோசடியாக உயிலை உற்பத்தி செய்து அவர் எங்கள் அலுவலகத்தில்பதிவு செய்துள்ளார் என்றால் இல்லை.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

உயிலை யார் வந்து கொடுத்து டெபாசிட் செய்துகொண்டார் என்ற விவரத்தை பதிவு செய்தபிறகுதான் உயிலை எங்கள் அலுவலகத்தில் டெபாசிட் செய்தோம் என்றால் ஆமாம். அந்த ஆவணத்தை அசலுடன் ஒப்பிட்டு **நீ.ம.சா.ஆ.**3 ஆக குறியிடப்படுகிறது. அன்றைய தேதியில் உயில் டெபாசிட் செய்த விஜயத்தம்மாளிடம் ரசீது கொடுக்கப்பட்டது அந்த ரசீது அசலுடன் ஒப்பிடப்பட்டு **நீ.ம.சா.ஆ.4** ஆக குறியிடப்படுகிறது.

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.